**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 15** |
| **Name** | : | **Dr**. திரு. ராஜபிரபாகரன் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.02.2024**

எதிரி-2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரசு ராஜாஜி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.10.2016 ம் தேதியன்று நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது, அன்றைய தினம் பேரையூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் படி, பேரையூர் காவல் நிலைய குற்ற எண். 177/2016 வழக்கில் அடையாளம் தெரியாத பெண் உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகேள் கடிதம் பெறப்பட்டதன் பேரில், சம்பவ இடம் பிற்பகல் 05.45 மணியளவில் சென்று பிரேத பரிசோதனை செய்தேன்.

1) அவரது உடல் மண்ணில் புதைந்திருந்தது.

2)அவரது ஆடைகள் அனைத்தும் எந்தஒரு சேதமும் இன்றி இருந்தன.

3) வெளி காயங்கள் ஏதும் இல்லை.

4) அவரது வலது கால் முட்டிக்கு கீழ் அழுகி இருந்தது.

5) அவரது உடல் முழுவதும் புழுக்கள் இருந்தன.

6) அவரது பெண் உறுப்பு அழுகிய நிலையில் இருந்தது.

7) அவரது கர்ப்பப்பை, சிறுநீரக பை, சிறுநீரகம், மண்ணீரல் ஆகியவை முழுவதுமாக அழுகியிருந்தது. கை, கால், நெஞ்சு எலும்புகள், கழுத்து எழும்புகளில் எந்த காயமும் இல்லை.

8) தலையிலோ, கண், மூக்கு., வாய், சிறுகுடல், பெருகுடல் ஆகியவற்றில் எந்த ஒரு காயங்களும் இல்லை.

கிடைத்த உடல் பாகங்களை பரிசோதனைக்கு மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி உடல் பாகங்களில் எந்த ஒரு விஷமும் காணப்படவில்லை என்று விசரா அறிக்கை பெறப்பட்டதன் பேரில், கீழ் கண்டவாறு கருத்துரை வழங்கினேன்.

**கருத்து** : இந்த உடலில் எந்த ஒரு காயங்கள் இல்லாததாலும், அவரது உடல் அழுகியிருந்ததாலும், இறந்தவரின் உடல் உறுப்புகளில் விஷம் எதுவும் இல்லை என்று பெறப்பட்ட விஸசரா அறிக்கையின் அடிப்படையிலும், இறப்பின் தன்மை கூற இயலவில்லை என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.**13 ஆகும்.

**VISCERA REPORT அதசாஆ.** 14 **ஆகும்**.

**இறுதி கருத்துரை அதசாஆ.**15 **ஆகும்**.

பேரையூர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் கேள்விகளுக்கு கீழ்கண்டவாறு பதில் அளித்துள்ளேன்.

1) இறந்தவரின் பெண் உறுப்பி அழுகிய நிலையில் இருந்ததால் அவரது பிறப்புறுப்பில் இருந்து திரவம் எதுவும் எடுக்க முடியவில்லை

2) உடல் அழுகியிருந்ததால் இதைக் கூற இயலவில்லை.

3) இதைக் கூற இயலவில்லை.

4) 50 மில்லி திரவம் இருந்தது.

5) வயிறும் அதன் உள்ளே இருந்த உணவுப் பொருட்களும் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**பேரையூர் காவல் ஆய்வாளர் அவர்களின் கேள்விகளுக்கு நான் அளித்த பதில் கடிதம் அதசாஆ.** 16 **ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

பிரேத பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது, அன்று பிற்பகல் 02.15 மணிக்கு பெற்றேன். எந்த காவலர் மேற்படி வேண்டுகோள் கடிதத்தை என்னிடம் கொடுத்தார் என்ற விபரத்தை அதசாஆ.13 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக, கையாலோ, கம்பாலோ, துணியாலோ கழுத்தை இறுக்கினால் கழுத்தில் உள்ள நாவடி எலும்பு, குறவளை எலும்பு உடையும் என்றால் எலும்புகள் உடைவதற்கும் வாய்ப்புண்டு, எலும்புகள் உடையாமல் இறப்பதற்கும் வாய்ப்புண்டு. இறுக்கும்போது வேகல் நரம்பை அமுக்கினால் கூட அது இதயத் துடிப்பை நிறுத்துவதற்கு போதுமானது. இந்த வழக்கில் நான் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட உடலில் அவ்வாறு எலும்புகள் உடையப்பட்டிருந்ததா என்றால் இல்லை. ஒரு ஆணின் விந்தணுக்கள் இன்னாருடையது என்று குறிப்பிட்டு சொல்ல இயலும். அந்த விந்தணு பல மாதங்கள் ஆனாலும் சொல்ல இயலுமா என்றால் உடலுறவு கொண்ட சுமார் 24 மணி நேரத்திற்குள் கண்டுபிடிக்க இயலும். ஒரு மாதத்திற்குள் விந்தணுவை வைத்து அந்த நபரைக் கண்டு பிடிக்க இயலுமா என்றால் இயலாது. அதிகபட்சம் 3 நாட்களுக்குள் இருந்ததால் தான் கண்டுபிடிக்க முடியும்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை